(மாண்புமிகு பேரவைத் தலைவர் – கோரிக்கை எண்.28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அன்பே அணிகலனாய்,
ஆற்றலே நல் ஆயுதமாய்
இனிமைச் சொல்வடிவாய்
ஈகைப் பெருங்குணமாய்
உண்மையின் உயர் வடிவாய்
ஊக்கத்தின் மறுவடிவாய்
எளிமைக்கோர் இலக்கணமாய்
ஏற்றம்தரும் தமிழ் அமுதாய்
ஒளிகாட்டும் சுடர் மதியாய்
ஓங்காரத்தின் ரீங்காரமாய்
தமிழ் உலகாளும் மகாசக்தியே !
நாளை பாரதத்தை ஆளும் பராசக்தியே !
எங்கள் ஏழேழு தலைமுறையும்
தங்கள் நன்றிக்கடன் பட்டிருப்போம்! தாயே!
ஈன்ற தாயினும் மேலாக அன்புகாட்டும்
எங்கள் குலதெய்வமே!
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே,
தங்கள் திருப்பாதங்களில்
தலை வணங்கி,

செய்தி மற்றும் விளம்பரத் துறை (தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தித் துறை) பற்றிய 28–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய் கணக்கில் ரூ.50,88,63,000/–க்கு (ரூபாய் ஐம்பது கோடியே எண்பத்தி எட்டு லட்சத்து அறுபத்தி மூன்றாயிரம்) மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.90,00,000/– (ரூபாய் தொன்னூறு லட்சம்) ஆகியவற்றிற்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் – கோரிக்கை எண்.30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை (தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தித் துறை) பற்றிய 30–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய் கணக்கில் ரூ.79,70,96,000/–க்கு **(ரூபாய் எழுபத்தி ஒன்பது கோடியே எழுபது லட்சத்து தொன்னூற்று ஆராயிரம்)** மற்றும் மூலதனக் கணக்கில் **ரூ.1,61,68,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தோரு லட்சத்து அறுபத்தி எட்டாயிரம்)** ஆகியவற்றிற்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் – கோரிக்கை எண்.53 சிறப்பு திட்ட செயலாக்கம் (சிறப்பு திட்ட செயலாக்கத்துறை) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை (சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை) பற்றிய 53—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்** வருவாய் கணக்கில் **ரூ.1,502,21,14,000/—க்கு (ரூபாய் ஆயிரத்து ஐநூற்றி இரண்டு கோடியே இருபத்தி ஒரு லட்சத்து பதினான்காயிரம்)** மூலதனக் கணக்கில் **ரூ.1,500,00,00,000/— (ரூபாய் ஆயிரத்து ஐநூறு கோடி) மற்றும்** கடன் கணக்கில் **ரூ.1000/— (ரூபாய் ஆயிரம்)** ஆகியவற்றிற்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

<u>(மாண்புமிகு பேரவைத் தலைவர்:— மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்)</u>

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**செய்தி மற்றும் விளம்பரம்**
**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை**
**மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை**

**பற்றிய கொள்கை விளக்க குறிப்புகள், தமிழிலும், அங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு அவரவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்ற பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களை தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்
செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை

———

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
வணக்கம்.

ஓராயிரம் ஆண்டு
தமிழ் அன்னை தவமிருந்து பெற்ற
வாராது வந்த மாமணியே !

கனிவின் சிகரமாய்
காலமெல்லாம் நிலைத்து நிற்கும்
கற்பூரப் பெட்டகமே !

இனிமைக்கு இனிமையூட்டும்
சொல் ஆற்றலும்,
வலிமைக்கு வலிமையூட்டும்
செயல் ஆற்றலும் கொண்டு,
தமிழகத்தை இயக்குகின்ற
தன்னிகரில்லா தங்கத் தலைவியே !

அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும்
அற்புத இயக்கத்தை
எஃகுக் கோட்டையென
கட்டிக் காக்கும் காவல் தெய்வமே!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை
தங்களது உயிரினும் மேலாகக் கருதி,
தமது உடல், பொருள், ஆவி அனைத்தும்
மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளில் சமர்ப்பிக்கும் உள்ள உறுதியும்,
மாறாத விசுவாசமும் கொண்ட
ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சே !

"திட்டத்திற்காக அல்ல மக்கள்;
மக்களுக்காகவே திட்டம் " என்று
மக்கள் கொள்கையைப் பறைசாற்றி
தமிழ் மண்ணாளும் மாதரசியே !

காவேரி நீரில் நம் உரிமையை நிலைநிறுத்தி,
கல்லணை கட்டிய
கரிகாற் சோழனின் மறுவடிவாய்
காவேரி டெல்டா விவசாயிகளின்
கண்ணீரைத் துடைத்த
காவியத் தலைவியே!

இலங்கையில் உள்ள ஈழத்தமிழர் உரிமை காக்க,
– தீர்மானம் நிறைவேற்றி,
தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் நலம் காக்க,
– திட்டங்கள் செயல்படுத்தி
உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராய்
விளங்கும் உன்னதத் தலைவியே!

மனைகள் தோறும் மங்கலம் பொங்கவும்
இல்லங்கள் தோறும் இன்பம் தங்கவும்
மின்விசிறி, மிக்சி, கிரைண்டர், என்று
விலையில்லா வீட்டு உபயோக சாதனங்களை
அள்ளி வழங்கும் அன்புத் தெய்வமே !

சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த எனக்கு,
நகர கழக செயலாளர்,
நகர்மன்ற துணைத் தலைவர்
மாவட்ட எம்ஜிஆர் அணி செயலாளர், என
பொறுப்புகள் பல தந்து, என்னைத் தகுதிப்படுத்தி,
சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி
மாவட்டக் கழகச் செயலாளர் ஆக்கி,
செய்தி விளம்பரத் துறை மற்றும்
சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறையின் அமைச்சராக்கி,

பாரம்பரியப் பெருமை மிக்க இப்பேரவையில்,

இரண்டாவது முறையாக
செய்தி விளம்பரத் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை,
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய
துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பையும்
அதன் தொடர்ச்சியாக விவாதத்திற்கு பதிலுரையும்
வழங்கிட வாய்ப்பளித்த

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே,

தங்கள் பொற்பாத கமலங்களை வணங்கி
எனது நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்கி
எனது பதில் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
துறைகள் தோறும் செயல்படுத்தும் திட்டங்களும்
ஆற்றுகின்ற சாதனைகளும்
மாண்புமிகு அம்மா அவர்களின்
அறிவாற்றலையும், நிர்வாகத் திறனையும்
பறை சாற்றும் !
அதே நேரத்தில்
செய்தித் துறையிலும்,
எழுதுபொருள் அச்சுத் துறையிலும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையிலும்
படைக்கின்ற சாதனைகள், அத்துடன் கூடுதலாக,
மாண்புமிகு அம்மா அவர்களின்
மனித நேயத்தையும், மனிதாபிமானத்தையும்,
சான்றோரை மதித்து பெருமைப்படுத்தும்
பெருங்குணத்தையும் எடுத்துக் காட்டும் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
"பண்புடையார் பட்டுண்டு உலகம்" – என்னும்
வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப
தமிழ்ச் சான்றோர்களுக்கும்,
தன்னலமற்ற தலைவர்களுக்கும்,
தியாகச் சீலர்களுக்கும் பெருமதிப்பளித்து
நினைவுச் சின்னங்களை எழுப்பியும்
மணிமண்டபங்கள் கட்டியும், சிலைகள் அமைத்தும்
தியாகத்தைப் பெருமைப்படுத்துகிறார் !

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா !
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா ! " – என்று
இளைய சமுதாயத்தை வரவேற்று
அவர்களது அறிவு, சுடர்விட்டுப் பிரகாசிக்க

மடிக்கணினிகள் வழங்கி
புதுமையைப் போற்றுகின்றார்!

"பெண்மை வாழ்க! பெண்மை வெல்க! "
என்னும் பாரதியின் திருவாக்கை இதயத்தில் ஏந்தி
மகளிர்படும் அடுக்களைத் துன்பத்தை
அறவே அகற்ற, மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, என
விலையில்லா வீட்டு உபயோக சாதனங்களை வழங்கி,
**மனிதநேயச் சின்னமாக**
**மகளிர் மனம் குளிர வைக்கின்றார் !**

இப்படி,
மக்கள் தலைவர்களின் சிறப்பைக் கொண்டாடி,
மக்கள் நலனை முதன்மையாக்கி,
மகத்தான திட்டங்களை செயல்படுத்துவதால்தான்,
மாண்புமிகு அம்மா அவர்கள்
செல்லும் திசையெல்லாம், வெல்லும் திசை ஆகிறது !
சொல்லும் சொல் எல்லாம், வெற்றி முழக்கம் ஆகிறது !

*<u>(செய்தி வெளியீடு)</u>*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு வருடத்தின் 365 நாட்களும், அதாவது
ஆண்டின் 54 வாரங்களும்
வாரத்தின் 7 நாட்களும்
நாளின் 24 மணி நேரமும்
மணியின் 60 நிமிடங்களும்
நிமிடத்தின் 60 நொடிகளும்
எந்த நிமிடமும், எந்த நொடியும், மாண்புமிகு அம்மா
அவர்களின் ஆணையை எதிர்பார்த்து, செய்திகளை
வழங்கிட ஆயத்த நிலையில் இருக்கின்ற துறைதான்
செய்தித் துறை!

புயல், மழை, வெள்ளம், சுனாமி என்று
இயற்கை இடர்ப்பாடுகள் எது வந்தாலும்,
கோயில் திருவிழா என்றும், பலர் கூடும் பெருவிழா என்றும்
கொண்டாடும் பண்டிகைக் காலங்கள் என்றாலும்
விதம்விதமான அரசு விடுமுறை நாட்கள் என்றாலும்
எதற்கும் அசைந்து கொடுக்காமல்
அடையா நெடுங்கதவுடன்
ஒரு பிரிவு செயலாற்றுகிறது என்றால்
அது செய்தித் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவுதான்

*<u>(பத்திரிகையாளர் நலன்)</u>*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

ஆக்கப்பூர்வ அறிவிப்புகளை,
செயல்படுத்துகின்ற சீரிய திட்டங்களை,
ஊடகங்கள், பொருட்காட்சிகள், புகைப்படக்
கண்காட்சிகள், விளம்பரங்கள், சிறப்பு வெளியீடுகள்,
திரைப்படப் பிரிவின் செய்தி மலர்கள்,
என பல வகையான வாய்ப்புகளைப் பயன்படுத்தி
மக்களிடம் கொண்டு போய் சேர்க்கின்ற
மகத்தான பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறை
சிறப்புடன் செய்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக,
பிரிண்ட் மீடியா என்னும் அச்சு ஊடகங்களோடும்,
விஷுவல் மீடியா என்னும் காட்சி ஊடகங்களோடும்
செய்தி மக்கள் தொடர்புத் துறை
நெருங்கிய தொடர்பு கொண்டு கடமையாற்றி வருகிறது.
அச்சு ஊடகமாயினும், காட்சி ஊடகமாயினும்
விழாக்களுக்கு வருகைதந்து, நிகழ்ச்சிகளில் பங்கேற்று
தங்கள் நிறுவனங்களுக்கு செய்தி சேகரித்துத் தரும்
பத்திரிகையாளர்களை
நண்பர்களாக,
துறையின் ஒரு அங்கமாக கருதி
அவர்களுக்குத் தேவையான
பல்வேறு உதவிகளையும் நன்மைகளையும்
மாண்புமிகு அம்மா அவர்களது அரசு
செய்து தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!
தான் ஒரு பத்திரிகையாளன் என்று
தன்னை பெருமையாகச் சொல்லிக்
கொள்வார் **முன்னாள்** முதல்வர் கருணாநிதி.
இனிமேல் அவர் எப்பொழுதுமே
**முன்னாள்** முதல்வர் கருணாநிதி தான்!,
மாண்புமிகு அம்மா அவர்களின் **முன்னால்**
வந்து அமர்வதற்கே தைரியமில்லாத
**முன்னாள்** முதல்வர் கருணாநிதி!
பத்திரிகையாளர்களைப் பற்றி எப்பொழுதுமே
அக்கறைப்பட்டதில்லை.

ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
பத்திரிகையாளர் மீது தனி அன்பு கொண்டு
பத்திரிகையாளர் நலன் காப்பதிலும்,
அவர்களது குடும்ப நலன் காப்பதிலும்
தனி அக்கறை கொண்டுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமது முந்தைய
ஆட்சிக் காலத்திலேயே 51.82 லட்சம் ரூபாய் வழங்கி
திருவான்மியூரில் செய்தியாளர்களுக்கு வீடுகள்

**கட்டித் தந்த அருஞ்செயலே**
**இதனை மிகத் தெளிவாய் எடுத்துக்காட்டும்.**
**மாண்புமிகு அம்மா அவர்களுக்கு**
**பத்திரிகையாளர்களின்**
**வாழ்க்கை பற்றியும்**
**அவர்களது தேவைகள் பற்றியும் நன்கு தெரியும்.**

**அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்**
**கடந்த 2011–ஆம் ஆண்டில் மூன்றாம் முறையாக**
**ஆட்சிப் பொறுப்பேற்றதும்**
**பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை**
**5000 லிருந்து ரூபாய் 6000 ஆக உயர்த்தினார்கள்.**
**அதேபோல மறைந்த பத்திரிகையாளர்களின்**
**குடும்ப ஓய்வூதியத்தை**
**2500 லிருந்து ரூபாய் 3000 ஆக உயர்த்தினார்கள்.**

**அதுமட்டுமன்றி,**
**பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கான**
**ஆண்டு வருமான உச்ச வரம்பை**
**1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும்,**
**ஓய்வு பெறும்போது பெறும் பணிக்கொடை உச்சவரம்பை**
**1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி**
**மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆண்டு**
**ஆணையிட்டார்கள் என்பதை இத்தருணத்தில்**
**நினைவு கூர்வது எனது கடமை ஆகும்.**

**அதுமட்டுமல்ல, அடிப்படை வசதிகள்கூட இல்லாமல்**
**கவனிப்பாரற்றுக் கிடந்த, தலைமைச் செயலக**
**செய்தியாளர்கள் அறையை, 20 லட்ச ரூபாய் மதிப்பீட்டில், ஒரு கார்பரேட் அலுவலகத்தைப் போல், புனரமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர்கள் அறைக்கு நேரில் வருகை தந்து அதனைத் திறந்து வைத்தார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பல்வேறு ஊடகங்களிலிருந்து செய்தி சேகரிக்க தலைமைச் செயலகத்திற்கு வருகை தருகின்ற செய்தியாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு உடனுக்குடன் செய்திகளையும், வீடியோ காட்சிகளையும், புகைப்படங்களையும் அனுப்பிடவும், அதேபோல, ஊடக நிறுவனங்களும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும்,**
**81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, ஊடக மையம்**
**மற்றும் வீடியோ படக்காட்சிகளை ஊடகங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி ஆகியவற்றை**
**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்**
**12.10.2012 அன்று திறந்து வைத்துள்ளார்கள் என்பதை இப்பேரவையில் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.**

**மாண்புமிகு அம்மா அவர்கள், பத்திரிகையாளர் நலன்கருதி**
**செயல்படுத்துகின்ற திட்டங்களையும்,**
**படைக்கின்ற சாதனைகளையும் பார்த்து**

ஏனைய மாநிலங்களில் உள்ள செய்தியாளர்கள்
நமது மாநிலத்தைப் பார்த்துப் பொறாமைப் படுகின்றனர்.
தங்களது மாநிலத்தில் இப்படிப்பட்ட வசதிகளை செய்து தரும் முதலமைச்சர் இல்லையே என்று ஏங்குகிறார்கள்
என்பதை மிக்க பெருமிதத்துடன்
இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**
மாண்புமிகு அம்மா அவர்களது அரசு
பத்திரிகையாளர் நலனுக்காக செயல்படுத்தி வரும்
செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்குதல்,
இலவசம் பேருந்துப் பயண அட்டை வழங்குதல்,
பத்திரிகையாளர் நலநிதி உதவி, பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவி என தேவையான அனைத்து திட்டங்களையும்
முனைப்புடன் செயல்படுத்தி வருகிறோம்
என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் நினைவிடம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
" உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"
– என்று பாடினார் வள்ளலார் .

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுவதில் மட்டுமல்ல,
புறமொன்று செய்வதிலும்,
கை தேர்ந்த திறமையாளர், கருணாநிதி.

முன்னாள் முதலமைச்சர்
பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களை
தன்னுடைய நாற்பது ஆண்டு கால நண்பர் என்பார்.
அமெரிக்காவிலிருந்து உடல் நலம் பெற்றுத் திரும்பி வந்ததும்
அவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிடுகிறேன் என்பார்.

அதே நேரம்,
"அவர் எனக்கு இன்னா செய்தார்,
அவருக்கு நான் நன்னயம் செய்கிறேன்"
என்று பகிரங்கமாக பொது மேடையில்
அவதூறு பேசிப் பூரித்துப் புளகாங்கிதம் அடைவார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
சென்னை விமான நிலையத்தின்
இரண்டாவது உள்நாட்டு முனையத்திற்கு,
புரட்சித்தலைவர் எம்ஜிஆர் பெயரை வைத்திட
வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

**உடனே**
**விமான நிலையத்திற்கு எம்ஜிஆர் பெயரா ? – என்று,**
**பொறாமைத் தீ சுட்டுப் பொசுக்க,**
**மூளை வெந்து போய்**
**எம்ஜிஆர் பெயரை வைத்தால்**
**குழப்பம்தான்ஏற்படும் என்று**
**விஷத்தைக் கக்கி இருக்கிறார்.**

**ரொம்பவும் நியாயமாகப் பேசுவதைப் போலக்**
**காட்டிக் கொள்ள, கூடவே**
**மாண்புமிகு எம்ஜிஆர் அவர்களுக்கு நினைவுச்**
**சின்னம் எழுப்பியதாகக் கூறியிருக்கிறார்.**

**டாக்டர் எம்ஜிஆர் அவர்களது தயவால் தானே**
**முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தோம்**
**என்ற நன்றி உணர்வு சிறிதும் இல்லாமல்,**

**நினைவுச் சின்னம் அமைக்கவில்லையென்றால்,**
**மக்களின் தீராத வெறுப்புக்கு ஆளாகிவிடுவோம்**
**என்ற பயத்தில்**

**நினைவுச் சின்னம் அமைத்திட முனைந்தவர் கருணாநிதி.**

**மனம் முழுவதும் நிறைந்திருந்த காழ்ப்புணர்ச்சியால்**
**டாக்டர் எம்ஜிஆர் துயிலிடத்தின் மேலே,**
**மழை பெய்யும்போது நனையாமல் இருக்க,**
**நாம் கையில் பிடித்துக் கொள்வோமே ...**
**அதைவிட சின்னதாக ஒரு குடையை வைத்தார்.**

**கேட்டால்,**

**எம்ஜிஆர் பெரிய கொடை வள்ளல் அல்லவா ! அதனால்தான் கொடை (குடை) வைத்திருக்கிறேன் என்று எதுகை மோனையாய் ஏளனம் செய்தார்.**

**ஆனால்,**

**பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் வாரிசான**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,**

**– உலகமே வியந்து பாராட்டும் வகையில்**
**– மிகப் பிரம்மாண்டமாக**

**பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களின்**
**நினைவிடத்தை புதுப்பித்து, புனரமைத்து,**
**டாக்டர் எம்ஜிஆர் அவர்களுக்கு**
**எந்த அளவு பெருமை சேர்க்க வேண்டுமோ அதற்கும் மேலாக**
**பெருமை சேர்த்திருக்கிறார்கள்.**

**ரூபாய் 8.90 கோடி செலவில், டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் நினைவிடத்தை அழகூட்டி, மெருகேற்றி, புனரமைத்ததோடு, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தை புதுப்பிக்கும் பணிகளையும் மேற் கொண்டார்கள். இப்படி சிறப்போடு புனரமைத்து புதுப்பிக்கப்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் 9.12.2012 அன்று திறந்து வைத்துள்ளார்கள்.**

**புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் மீது**
**கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சியை, கருணாநிதி,**
**எந்தக் காலத்திலும் மாற்றிக் கொள்ளமாட்டார் என்பதை**
**எடுத்துக்காட்டும் வகையில்,**
**புனரமைக்கப்பட்ட நினைவிடத்தை**
**திறக்கவிடாமல் செய்துவிடவேண்டும் என்று**
**கருணாநிதி முட்டுக்கட்டை போட்டார்.**
**வழக்குத் தொடர்ந்து பார்த்தார்.**

**ஆனால்,**
**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்**
**அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து**
**தீயசக்தியின் தீய எண்ணங்களைப் பொடிப் பொடியாக்கி**
**மாண்புமிகு அம்மா அவர்கள்**
**புனரமைக்கப்பட்ட நினைவிடத்தை**
**பார் போற்றும் வகையில் திறந்து வைத்தார்கள்.**

**இன்று புதுப் பொலிவுடன் பூத்துக் குலுங்கும்**
**பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களது நினைவிடத்தின்**
**நுழைவாயிலில் அமைந்துள்ள**
**பறக்கும் தங்கக் குதிரையின் பொன்னிற சிறகுகள் போல்,**
**பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் புகழை**
**பட்டொளி வீசி பறக்க வைத்திருக்கிறார்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்கள்!**

***<u>(கலைவாணர் அரங்கம் – புதிய கலையரங்கம்)</u>***

**சென்னை**
**ஓமந்துாரார் அரசினர் தோட்ட வளாகத்தில் இருந்த**
**கலைவாணர் அரங்கமும்,**
**அதன் மேல்தளத்தில் இயங்கிக் கொண்டிருந்த**
**மாநில செய்தி நிலையமும்**
**முந்தைய திமுக ஆட்சியினரால்,**
**இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது.**

**இதற்கு மாற்றாக, புதுமை கொஞ்சும் பொலிவோடு,**
**61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கலையரங்கத்தையும்,**
**2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில செய்தி நிலையத்தையும்**

**புதியதாக அமைக்க**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**இதன் பூர்வாங்கப் பணிகள்**
**மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை**
**மிகுந்த மகிழ்ச்சியுடன்**
**இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***(நினைவுச் சின்னங்கள் – நினைவகங்கள்)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**" நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டும் உலகு"**

**– என்று வள்ளுவர் வகுத்துத் தந்த வழிவகையின்படி, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்துவதையும், அவர்களது பெருமைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்வதையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**பெரியோரை மதிக்க வேண்டும் என்பதும், பெரியோர்களுக்கு உரிய மரியாதை அளிக்க வேண்டும் என்பதும்,**
**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**உதிரத்தில் கலந்து நிற்கும் உத்தம குணம்!**
**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**பாரம்பரியத்தில் ஊறிய பண்பாடு!**
**எங்கள் தாய்க்குத் தாயான**
**அன்னை சந்தியா அம்மா அவர்களிடமிருந்து**
**நேரடியாக பெற்றிருக்கும் அரும் செல்வம்!**

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்**
**இந்த அருங் குணத்தை பெற்றிருக்கிற காரணத்தால்**
**தமது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே**

**2003ஆம் ஆண்டில்**
**ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில்**
**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுக்கு**
**திருநெல்வேலியிலும்,**
**ரூபாய் 38.50 லட்சம் மதிப்பீட்டில்**
**எம்ஜிஆர் அருங்காட்சியகத்தை**
**டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் நினைவிடத்திலும்,**

**2004 ஆம் ஆண்டில்**
**ரூ.24.37 லட்சம் மதிப்பீட்டில்**
**தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு**

**திருவாரூரிலும்,**
**ரூபாய் 38.50 லட்சம் மதிப்பீட்டில்**
**வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களுக்கு**
**தூத்துக்குடி, கட்டாலங்குளத்திலும்,**

**2005 ஆம் ஆண்டில்**
**தலா ரூ.25 லட்சம் மதிப்பீட்டில்**
**வீரபாண்டிய கட்டபொம்மனின் இரு கரங்களாக விளங்கிய**
**சுதந்திரப் போராட்ட வீரர்கள்**
**வெள்ளையத் தேவனுக்கு தூத்துக்குடி வல்லநாட்டிலும்,**
**சுந்தரலிங்கத்திற்கு பாஞ்சாலங்குறிச்சி கவர்னகிரியிலும்,**
**ரூ.21 லட்சம் மதிப்பீட்டில்**
**ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு சென்னையிலும்,**
**ரூ.39.60 லட்சம் மதிப்பீட்டில்**
**மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மதுரையிலும்,**

**ரூ.22.50 லட்சம் மதிப்பீட்டில்**
**அமுதகவி உமறுப்புலவருக்கு எட்டயபுரத்திலும்,**
**ரூ.30 லட்சம் மதிப்பீட்டில்,**
**மாவீரர் தீரன் சின்னமலைக்கு ஈரோடு ஓடாநிலையிலும்**
**மணிமண்டங்கள் அமைத்திடவும்,**
**தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள்**
**தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்த வீட்டை**
**நினைவில்லமாக ஆக்கவும்**

**2006ஆம் ஆண்டில்**
**ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் தருமபுரியில் அதியமான் கோட்டத்தை அமைத்திடவும்**

**மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள் என்பதை இந்த அவையில் பெருமையுடன் தெரிவிக்க விழைகிறேன்.**

**இப்பொழுது மூன்றாம் முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி**

**சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் சிலையை 11.95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புடன் புனரமைத்ததுடன்,**

**சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகத்தை 11.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பொலிவுடன் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதேபோல, சென்னை காமராஜர் நினைவு இல்லம் மற்றும் கன்னியாகுமரி காமராஜர் மணிமண்டபம் ஆகியவை ரூ.62.00 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டபடி,**

**வீரமங்கை வேலுநாச்சியார் நினைவாக சிவகங்கையிலும், தீரன் சின்னமலை நினைவாக சங்ககிரியிலும், தலா ரூ.60.00 லட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னம் அமைக்கும் பணிகளும்,**

**ரூ.8.79 லட்சம் மதிப்பீட்டில், மொழிப்போர் தியாகி கீழப்பழூவூர் சின்னசாமி அவர்களுக்கு திருச்சிராப்பள்ளியிலும்,**

**ரூ. 8.50 லட்சம் மதிப்பீட்டில், தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு, களியக்காவிளையிலும்,**

**ரூ. 10.80 லட்சம் மதிப்பீட்டில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, சுசீந்திரத்திலும், சிலை அமைக்கும் பணிகளும், நடைபெற்று வருகின்றன.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அண்மையில், 20.2.2013 அன்று,**

**ரூபாய் 1.51 கோடி மதிப்பீட்டில் சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மூவர் மணிமண்டபம்,**

**ரூபாய் 69 லட்சம் மதிப்பீட்டில் விருப்பாட்சியில் கட்டப்பட்டுள்ள விடுதலை போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம்,**

**ரூபாய் 69 லட்சம் மதிப்பீட்டில் ஓமந்தூரில் கட்டப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மணிமண்டபம்,**

**ரூபாய் 63 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்து நவீனமயம் ஆக்கப்பட்ட கும்பகோணம் மகாமகம் பல்நோக்கு கலையரங்கம்**

**ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முன்னர் அறிவித்தவாறு,**

**ரூபாய் 2.38 கோடி மதிப்பீட்டில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும், சுயமரியாதை சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும் சென்னையிலும்,**

**ரூபாய் 77 லட்சம் மதிப்பீட்டில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகரிலும்,**

**9.4.2013 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தவாறு, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு கயத்தாறிலும்,**

**3.5.2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தவாறு மனுநீதி சோழனுக்கு திருவாரூரிலும்**

**மணிமண்டபங்கள் அமைத்திட பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.**

***(மாற்று திறனாளிகள் நலனுக்கு சாய்தளங்கள்)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்**
**கொடையும் தயவும் பிறவிக்குணம்**

**– என்றார் ஔவையார்**

ஔவையார் எடுத்துச் சொன்னபடி,

மற்றவர்களுக்கு அள்ளித்தரும் கொடை குணத்தையும்,
ஏழைகளுக்கு தயவுகாட்டும் இரக்க குணத்தையும்,
பிறக்கும்போதே பெற்றவர்
நமது இதயதெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

சிலரிடம் பணம் இருக்கும், ஆனால்,
கொடுக்கிற மனம் இருக்காது.
மற்றவர்களிடமிருந்து, எடுக்கிற குணம்தான் இருக்கும்.

பிறந்தநாளில், அண்டாவையும், குண்டாவையும் வைத்து
"அள்ளிப்போடு ராஜா, அள்ளிப்போடு" என்று
சுருட்டுகிற குணம்தான் இருக்கும்.

சிலரிடம் அதிகாரம் இருக்கும், ஆனால்
தன் மகனுக்கும், மகளுக்கும், பேரனுக்கும்
பதவிகள் வாங்கித் தருவதற்குத்தான்
அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார்களே தவிர
தமிழ்நாட்டிற்கு நன்மை செய்யப் பயன்படுத்த மாட்டார்கள்.

அலைக்கற்றை ஊழலில், அகப்பட்டதையெல்லாம்,
அப்படியே சுருட்டி, அடுத்தவர்களுக்கு தெரியாமல்
அமுக்கப் பயன்படுத்துவார்களே தவிர
தமிழக மக்களுக்கு நல்லது செய்ய ஒருக்காலும்
அவர்களது அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டார்கள்.

ஆனால்,
தமிழர்களின் வாழ்வு வளம் பெற்றிட
உதவுகின்ற குணமும் மனமும்,
மாண்புமிகு அம்மா அவர்களிடம் மட்டும்தான்,
ஒருங்கே குடியிருக்கும்.

தமிழரின் நல்வாழ்வுக்கு
தன்வாழ்வையே அர்ப்பணித்து வாழும்
மாண்புமிகு அம்மா அவர்கள்
மாற்றுத்திறனாளிகள் மீது தனி அக்கறை கொண்டு
மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி
பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ் சான்றோர் நினைவாகவும்,
தன்னலமற்ற தலைவர்கள் புகழைப் போற்றும் வகையிலும்
அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களுக்கு,
மாற்றுத் திறனாளிகள்
எளிதாகச் சென்று பார்வையிட வசதியாக
மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக
ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டிலேயே

**சாய்தளங்கள் அமைக்க ஆணையிட்டு,**
**25 நினைவகங்களில், ரூ.39.56 லட்சம் மதிப்பீட்டில்**
**சாய்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை**
**மிகவும் பெருமிதத்துடன்**
**இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***(அலங்கார ஊர்திகளுக்கு பரிசு)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**"வெற்றி மீது வெற்றி வந்து**
**என்னைச் சேரும்**
**அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம்**
**உன்னைச் சேரும்"—என்று**
**புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் ஒரு திரைப்படத்தில் பாடுவார். ஆனால்,**
**"வெற்றி மீது வெற்றி வந்து**
**மாண்புமிகு அம்மா அவர்களைச் சேரும்**
**அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம்**
**மக்களைச் சேரும்"**
**—எனத் தமிழ்நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது.**

**"மாபெரும் வெற்றி என்பது,**
**ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல!**
**அது, சிறு சிறு வெற்றிகளின் கூட்டு தொகை!"**
**என்றும்**
**"வெற்றி என்பது, ஒரே நாளில் அடைந்து**
**மறு நாளில் மறந்துபோகிற இலக்கு அல்ல!**
**அது ஒரு தொடர் பயணம்!"**
**என்றும்**

**மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.**

**மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக் கூறியபடி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்திய அரங்கிலும், தமிழ்நாடு அளவிலும் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது செய்தி மக்கள் தொடர்புத் துறை.**

**இந்தியத் துணைக் கண்டத்தில் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முதல் பரிசை பெற்றது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்.**

**அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் வெளிப்படுத்தும் வகையில், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் இடம்பெறும் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்று 2012 ஆம் ஆண்டிலும், கடந்த 2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத் துறை பரிசுகள் பெற்று வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.**

*(பொருட்காட்சி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு சார்பில் பொருட்காட்சிகள் நடத்துவது முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களது ஆட்சிக் காலத்தில்தான் முதன் முதலாக தொடங்கப்பட்டது.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், ஆண்டுதோறும் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் ஆக ஐந்து இடங்களில் மட்டுமே அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், வேலூரிலும், திருநெல்வேலியிலும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகளை ஆண்டு தோறும் நடத்தவும், கூடுதலாக திருச்சி, தூத்துக்குடி, தஞ்சாவூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் நடத்தவும் ஆணையிட்டவாறு, தற்போது ஒன்பது இடங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
துறைகள் தோறும் சாதனைகள் படைக்கும்
மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்
பொருட்காட்சிகள் நடத்துவதிலும், அதன் வாயிலாக
அரசுக்கு வருவாய் ஈட்டுவதிலும் மாபெரும் சாதனை
படைத்து வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் முதன் முதலாக ஆட்சிப்பொறுப்பேற்ற 1991–1996 ஆண்டுக் காலத்தில் பொருட்காட்சிகள் மூலமாக ரூ.3.93 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.
ஆனால், அதைத்தொடர்ந்து வந்த திமுகவின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ரூ.3.28 கோடி மட்டுமே வருவாய் ஈட்டப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில்
அதாவது 2001–2006ல் பொருட்காட்சிகளின் வருவாய்
6.21 கோடி ரூபாய் ஆகும்.
ஆனால் கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில்
2006–2011 ஆண்டில், ரூ.4.72 கோடி மட்டுமே வருவாயாக ஈட்டப்பட்டது.

**உறுப்பினர்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்**
**மாண்புமிகு அம்மா அவர்கள்**
**ஈட்டித்தந்த வருவாய் ரூ.6.21 கோடி**
**மைனாரிட்டி திமுக ஆட்சியில் ஈட்டிய வருவாய் ரூ.4.72 கோடி**
**அதாவது கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் குறைந்துள்ளது. இல்லை, வேண்டுமென்றே குறைக்கப்பட்டது.**
**இந்த ஒன்றரைக் கோடி ரூபாய் யார் பாக்கெட்டுக்கு போனது?**

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த இரண்டாண்டுகளில் ரூ.4.65 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தில் ஈட்டப்பட்ட வருவாயில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இரண்டாண்டுகளிலேயே ஈட்டியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக
ஆட்சிப் பொறுப்பேற்றபின் இதுநாள் வரை 68 தனியார் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு இதன் மூலம்
4 கோடியே 50 லட்சம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு பெறப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

***(எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்)***

திரைப்பட தயாரிப்பு தொழில் நுணுக்கங்களையும் கலை உணர்வுகளையும் பயிற்றுவிப்பதில் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் தலை சிறந்து விளங்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்ற மாணவச் செல்வங்கள் உலகப் புகழ் பெற்று திறமையானவர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை மேம்படுத்துவதில் தனி அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்நிறுவனத்தின் வளாகத்தில், பாழ்பட்டுக் கிடந்த படப்பிடிப்புத் தளத்தை, ரூபாய் 1 கோடியே 48 லட்சம் மதிப்பீட்டில் முழுவதும் குளிரூட்டப்பட்ட நவீன படப்பிடிப்புத் தளமாக புனரமைத்து புதுப்பித்துக் கொடுத்ததுடன் 6.1.2012 அன்று தமது பொற்கரங்களால் திறந்துவைத்து பெருமைப் படுத்தினார்கள்.

இந்த நிறுவனத்தில் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, ஒலிப்பொறியியல், படத்தொகுப்பு மற்றும் படம் பதனிடுதல் ஆகிய மூன்று ஆண்டு கால பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட, மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவது இல்லை. அவர்களுக்கு கல்விக் கட்டணம் முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்க இறுதி ஆண்டில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒரு பட்டயப் படம் தயாரிக்க ஆகும் செலவிற்காக ரூபாய் 8000/–வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை 15000 ரூபாய் ஆக உயர்த்தி வழங்க கடந்த ஆண்டு ஆணையிட்டார்கள். இதன்படி 14 மாணவ படக்குழுவினர் பயனடைந்துள்ளனர்.

மேலும் மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களில் சிறந்த இயக்குநர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம் ரூபாய் 5000/– ரொக்கம், நினைவுக் கேடயமும் கொண்ட குறும்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

**மாணவர்கள் தயாரிக்கும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்துகொள்ள அனுப்புவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த இரண்டாண்டுகளில் ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.**

**எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை சேர்ந்த மாணவர்களின் பயன்பாட்டிற்காக இந்நிறுவனத்தில் உள்ள முன்காண் திரையரங்கத்தை புனரமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது.**

***(அனிமேஷன்–விஷுவல் எபக்ட்ஸ் புதிய பாடப்பிரிவு தொடக்கம்)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**புதுமைக்கு ஊக்கம் தந்து**
**புதுயுகம் படைப்பவர் …**

**புதுமையைப் பாராட்டி**
**திறமையை வளர்ப்பவர் …**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

**எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி**
**பயிற்சி நிறுவனத்தில் தற்போதுள்ள பாடப்பிரிவுகள் யாவும்**
**சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னதாக தொடங்கப்பட்டவை.**

**நவீன விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவும்**
**உலக அளவில் திரைப்படத் துறையில் ஏற்பட்டு வரும்**
**மாற்றங்களின் அடிப்படையிலும்**
**புதியப் பாடப் பிரிவுகளை,**
**புதிய பட்டயப் படிப்புகளை தொடங்க வேண்டும்**
**என்று இதுவரை யாருமே சிந்திக்க வில்லை.**

**ஆனால்,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,**

**எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப்**
**பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள்**
**– திரைப்படத் துறையில் நவீன தொழில்நுட்பத்திற்கு**
**ஏற்ப தலை சிறந்து விளங்கிட வேண்டும்,**

**– படைப்புத் துறையில் பயனுள்ள வாய்ப்புகளை**
**பெற்றிடவேண்டும்**

**என்னும் புதுமைச் சிந்தனையுடன்,**
**ரூபாய் 9.50 கோடி மதிப்பீட்டில்**
**அனிமேஷன் மற்றும் விஷுவல் எபக்ட்ஸ்**

**துறையில் புதிய பாடப் பிரிவுகளை**
**தொடங்கிட ஆணையிட்டவாறு**

**மோஷன் பிக்சர் அனிமேஷன் மற்றும்**
**மோஷன் பிக்சர் விஷுவல் எபக்ட்ஸ் ஆகிய**
**இரண்டு பட்டயப் படிப்புகள்**
**2013–2014 கல்வி ஆண்டு முதல்**
**தொடங்கப்பட உள்ளன என்பதை**
**இப்பேரவையில் மிகுந்த மகிழ்ச்சியுடன்**
**தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இப்புதிய பட்டயப் படிப்புகளில் பயிலும் மாணவர்கள்**
**அனிமேஷன் மற்றம் விஷுவல் எபக்ட்ஸ்**
**தொழில்நுட்பப் பணியாளர்களாக அல்லாமல்**
**– தொழில்நுட்பப் படைப்பாளிகளாக**
**– தொழில்நுட்ப மேலாளர்களாக**
**உருவாக்கப்பட வேண்டும் என்பது**
**மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு**
**அளித்த அறிவுரையாகும்.**

**மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுரைப்படியும்**
**மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும்**
**புதிய பாடப் பிரிவுகளுக்கான பாடத் திட்டங்கள்**
**உருவாக்கப்பட்டு**
**அகில இந்திய தொழில் நுட்ப கல்விக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**சீரிய சிந்தனையில் உதித்த**
**சிறப்புமிக்க இந்த பட்டயப் படிப்புகள்**
**இவ்வாண்டு ஆகஸ்டு திங்களில் தொடங்கப்படவுள்ளன என்பதை இந்த அவைக்குத்**
**தெரிவிப்பதில்**
**மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.**

***<u>திரைப்படப் பிரிவு, திரைப்படத் துறையினர் நலவாரியம்</u>***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**திரைப்படத்துறை, கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் கருணாநிதியின் குடும்பத்துறையாகவே மாற்றப்பட்டது. கருணாநிதியின் குடும்பங்கள் திரைப்படங்கள் வாயிலாக தமிழ்மொழிக்கு எத்தகைய சேவை செய்தன என்பதை இந்த நாடு அறியும்.**

**ஒரு பேரனின் திரைப்படக் கம்பெனிக்குப் பெயர்**
**“ரெட் ஜெயன்ட் மூவிஸ்”!**
**இன்னொரு பேரனின் திரைப்படக் கம்பெனிக்குப் பெயர் “கிளவுட் நைன்”** (CLOUD NINE).
**இந்த நிறுவனத்தின் சார்பாக தூய தமிழில் பெயரை வைத்து ஒரு படம் வெளிவந்தது. அந்தப் படத்தின் பெயர் என்ன தெரியுமா ?**

**“ வ குவார்ட்டர் கட்டிங்”**

**தமிழ் மொழியை தன்பெயருக்கு குத்தகை எடுத்ததுபோல பேசிக்கொண்டிருக்கும் கருணாநிதி இதைக் கண்டித்தாரா ? இல்லை. பெயரை மாற்றச் சொன்னாரா ? இல்லை.**
**காரணம் அவருக்கு தமிழ் உணர்வு என்பது அறவே இல்லை.**

**ஆனால் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்மொழியை நேசிப்பவர். அதனால்தான்,**
**– பிறமொழிகள் கலக்காமல் தமிழில் வசனங்கள் இருக்க வேண்டும் ;**
**– தமிழ் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற படங்களாக இருக்க வேண்டும் ;**
**அப்படிப்பட்ட படங்களுக்குத்தான் வரிவிலக்கு அளிக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**திரைப்படத் துறையை ஊக்குவிப்பதற்காக, சிறந்த நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், தயாரிப்பாளர்களுக்கு பரிசுகளும், தமிழ்த் திரையுலகில் முத்திரை பதித்த தலை சிறந்த கலை விற்பன்னர்களுக்கு அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்ஜிஆர். கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.அதே போல, சின்னத்திரை கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டுகின்றன.**

***<u>(அரசு திரைப்பட மானியம்)</u>***

**சிறிய முதலீட்டில் திரைப்படங்கள் தயாரிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக அரசு மானியம் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமது முந்தைய ஆட்சிக் காலத்தில் இவ்வாறு வழங்கப்படும் மானியத்தொகையை ரூபாய் 5 லட்சத்திலிருந்து ரூபாய் 7 லட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டவாறு 2003ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூபாய் 7 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.**

**ஆனால் அரசு வழங்கும் திரைப்பட விருதுகளையும், கலை வித்தகர் விருதுகளையும், சின்னத்திரை விருதுகளையும் திரைப்பட மானியங்களையும் வழங்கிட கருணாநிதி எந்த ஆர்வமும் காட்டவில்லை.**
**2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்படவில்லை.**
**2007 முதல் 2010ஆம் ஆண்டு வரை திரைப்பட மானியங்களும் வழங்கப்படவில்லை.**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கருணாநிதி நிலுவையில் விட்டுச் சென்ற விருதுகள் மற்றும் மானியங்களை உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டு உள்ளார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.**

**மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னையில் சர்வதேச திரைப்பட விழாவை மிகவும் சிறப்புடன் நடத்திட 2011–ஆம் ஆண்டில் ரூபாய் 25 லட்சமும், 2012 ஆம் ஆண்டில் ரூபாய் 50 லட்சமும் மானியம் வழங்கி திரைப்பட விழா சீரும் சிறப்புமாக நடைபெற காரணமாக இருந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***<u>(திரைப்படத் துறையினர் நல வாரியம்)</u>***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு அம்மா அவர்கள்,**
**தொழிலாளர்கள் நலம் பெற சீரிய திட்டங்களை செயல்படுத்தி**
**தொழிலாளர்களுக்கு உற்ற தோழனாகவும்**
**உழைக்கும் வர்க்கத்திற்கு உறுதுணையாகவும்**
**இருக்கிறார்கள்.**

**ஆனால்,          கருணாநிதி**
**தொழிலாளர்களுக்கு தோள் கொடுக்கவில்லை.**
**துன்பங்களைத்தான் கொடுத்தார்.**

**கருணாநிதியின் ஆட்சியில், தொழிலாளர் நல வாரியங்கள்,**
**தொழிலாளர்களை நலமாக்கவில்லை.**
**அவரது கட்சிக்காரர்களைத்தான் வளமாக்கியது.**

**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் வாரியங்களின் பலன்கள் எல்லாம் பயனாளிகளுக்குப் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது.**

**மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி**
**திரைப்படத் துறை சார்ந்த**
**41 சங்கங்களைச் சேர்ந்தவர்களும் பயனடையும் வகையில்**
**"திரைப்படத் துறையினர் நல வாரியம்" சீரமைக்கப்பட்டு**
**அந்த வாரியத்தின் பணிகள் இன்றைக்கு**
**மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**

**கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் பணியாற்றிய ஊழியர்களுக்குக் கூட சம்பளம் தரமுடியாத நிலையில் இருந்தது திரைப்படத் துறையினர் நலவாரியம்.**

**கடந்த 2011ஆம் ஆண்டில்**
**மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும்**
**மாண்புமிகு அம்மா அவர்கள், திரைப்படத் துறையினர் நலவாரியத்தின் நிலையை ஆய்வு செய்து**
**உடனடியாக அதன் செயல்பாடுகளுக்காக ரூ.49,12,314/–**
**( நாற்பத்து ஒன்பது லட்சத்து பனிரெண்டாயிரத்து முன்னூற்று பதினான்கு ரூபாய் ) அள்ளிக் கொடுத்தார்கள்.**
**"அள்ளிக்கொடுத்து, வாழ்பவர் நெஞ்சம்**
**ஆனந்தப் பூந்தோப்பு" என்று**

**புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் பாடியதைப் போல மாண்புமிகு அம்மா அவர்களின் மனம்**
**ஆனந்தப் பூந்தோப்பாக மணம் வீசி**
**திரைப்படத் தொழிலாளர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது.**

**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி**
**திரைப்படத் துறையினர் நலவாரியத்தைச் சேர்ந்த 426 உறுப்பினர்களுக்கு ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***(தமிழ்நாடு திரைப்படப் பிரிவு)***

**மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திவரும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், அரசின் முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகள் செய்தி மலர்களாக வெளியிடப்படுகிறது.**

**வீடியோவில் பதிவு செய்து, அதை 35 மில்லி மீட்டர் திரைப்பட சுருளாக மாற்றி, மத்திய அரசு திரைப்படப் பிரிவின் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் சுழற்சி முறையில் திரையிடப்பட்டு வந்தன.**

**இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப திரைப்படங்கள் யாவும் க்யூப் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம்** HARD DISC **வழியாக திரையிடப்படுவதையொட்டி 35 மில்லி மீட்டர் திரைப்படச் சுருள்களில் தயாரிக்கப்பட்டு வந்த அரசின் செய்தி மலர்களை க்யூப் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலமே திரையிட நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.**

**இந்த ஆணைப்படி தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் செய்தி மலர்கள் கடந்த பிப்ரவரி முதல்** HARD DISC **ஆக மாற்றி வழங்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள க்யூப் வசதியுள்ள அனைத்து திரையரங்குகளிலும் திரையிடப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளும் திட்டங்களும் மக்களைப் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவில் உள்ள பேரறிஞர் அண்ணா, டாக்டர் எம்ஜிஆர், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பங்கேற்ற அரசு நிகழ்ச்சிகளின் செய்திமலர்களை காலகாலத்திற்கும் பயன்படும் வகையில் அவற்றைப் பழுது நீக்கி, 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு முறையில் "டிஜிட்டலைஸ்" செய்து பாதுகாத்திட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு இதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகளை, நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து அதன் வீடியோ பதிவுகளை உடனுக்குடன் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு பரிமாற்றம் செய்திடவும், அவற்றை செய்தியாளர்களுக்கு வழங்கிடவும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு ரூ.18 லட்சம் மதிப்பீட்டிலான நேரடி ஒளிபரப்புக் கருவி நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***(தமிழரசு)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் போது, சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் இருந்த தமிழரசு அச்சகமும், தமிழரசு அலுவலகமும் திடீரென ஒரு நாள் நள்ளிரவில் தக்க மாற்று இடம்கூட அளிக்கப்படாமல் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டது.**

**தமிழ்நாடு அரசின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழரசு இதழின் முக்கியத்துவத்தை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ.5.83 கோடி மதிப்பீட்டில், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட ஆணையிட்டார்கள்.**

**சென்னை தரமணியில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவையொட்டி அமையும் இப்புதிய கட்டடம் மிக விரைவாக கட்டப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவையில் தெரிவிக்க மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

**தமிழரசு அச்சகத்தை அதிநவீன படுத்தும் வகையில் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் கணினியிலிருந்து நேரடியாக அச்சுத்தகடு செய்யும் வசதி கொண்ட** CTP (Computer to Plate) **நவீனத் தொழில்நுட்ப இயந்திரத்தை நிறுவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு பணிகள் மிக விரைந்து நடைபெறுகின்றன என்பதை இத்தருணத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**காலாண்டு இதழாக வெளிவந்துகொண்டிருந்த தமிழரசு ஆங்கில இதழ், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, கடந்த ஜூலை திங்கள் முதல் மாதாந்திர இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.**

**மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நூறாண்டு பேசும் சாதனையை ஓராண்டில் முடித்து ஒப்பற்ற சாதனை புரிந்ததையொட்டி தமிழரசு சிறப்பு வெளியீடுகளாக,**

**"மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள்" – ஆங்கிலம் மற்றும் தமிழ்.**

**"வெற்றிக் கதைகள்",**

**மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மொழிகள் அடங்கிய "அமுத மொழிகள்",**

**அரிய புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பு நூல்,**

**"பத்திரிகைகளின் பார்வையில் மிளிரும் சாதனைகள்"**

**ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன என்றும், இந்நூல்கள் தமிழக மக்களால் மட்டுமல்லாமல், தேசிய அளவிலும் பெரிதும் வரவேற்கப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.**

***(சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**திமுக ஆட்சி நடக்கும் பொழுதெல்லாம்**
**அது தமிழ்நாட்டிற்கு சோதனை காலம்!**
**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி**
**நடக்கும் பொழுதெல்லாம், அது**
**தமிழ்நாட்டிற்கு சாதனைக் காலம் !**

**திமுக ஆட்சி நடக்கும் பொழுதெல்லாம்**
**அது தமிழ்நாட்டிற்கு போதாத காலம்!**
**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி**
**நடக்கும் பொழுதெல்லாம் அது**
**தமிழ்நாட்டிற்கு பொற்காலம்!**

**இந்த உண்மையை**
**குன்றின் மேல் வைத்த விளக்கைப் போல**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை**
**உலகுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.**

**தமிழ்நாட்டு வரலாற்றிலேயே**
**முதன் முறையாகவும்,**
**இந்திய வரலாற்றில்**
**ஏனைய மாநிலங்கள் பின்பற்றும் வகையிலும்,**
**உலக வரலாற்றில்**
**ஒப்பு நோக்கிப் பாராட்டும் வகையில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறையை**
**உருவாக்கினார்கள்.**
**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**சீரிய சிந்தனையில் உருவாகி,**
**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**சிறப்பான செயல்பாட்டால் மெருகேறி**

**தமிழ்நாடு மக்களின் வாழ்க்கை வளம் பெற செயல்படுத்தப்படும்**

- **மகளிர் மனம் குளிர விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள்**
- **மாணவ, மாணவியரின் விஞ்ஞான அறிவு விரைந்து வளர விலையில்லா மடிக்கணினிகள்**

**ஆகிய திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்துவதோடு,**

- **வெண்மைப் புரட்சிக்கு விலையில்லா கறவை மாடுகள்**
- **கிராமப் பொருளாதாரப் புரட்சிக்கு விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள்**
- **ஏழைப் பெண்கள் வாழ்வில் விளக்கேற்ற தாலிக்குத் தங்கத்துடன் திருமண நிதி உதவி**
- **முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்**
- **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**
- **டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு பயன் திட்டம்**

**முதலான சிறப்புத் திட்டங்களின்**
**செயல் வேகத்தையும், முன்னேற்றத்தையும்**
**தொடர்ந்து கண்காணித்து**
**அத்திட்டத்தின் பயன்கள்**
**மாநிலத்தின் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைவதை**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை**
**உறுதி செய்து வருகிறது.**

**மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அரசின் திட்டங்கள் குறித்து உரிய வகையில் ஆய்வுகள் நடத்திடவும், தக்க தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காகவும், தலைமைச் செயலாளர் தலைமையில், நிதித்துறையின் முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அரசு செயலாளர் மற்றும் திட்டங்களை நேரடியாக செயல்படுத்தும் துறைகளின் அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்நிலைக் கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளார்கள் என்பதையும்,**

**இந்த உயர்நிலைக் கண்காணிப்புக் குழுவால், இத்திட்டங்களின் நிலை, திட்டங்களை செயல்படுத்தப்படும்போது எதிர்கொள்ளும் இடையூறுகள் மற்றும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகளும் பரிந்துரைகளும் கண்டறியப்பட்டு அவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மகளிர் மனம் குளிர வழங்கி வரும் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகிய விலையில்லா வீட்டு உபயோக சாதனங்கள்,**
**2011–12 ஆம் ஆண்டில் 25 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.**
**2012–13 ஆம் ஆண்டில் 35 லட்சம் வழங்கப்பட்டு வருகிறது.**

**மகளிர் நலத்தில் தனி அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த வீட்டு உபயோக சாதனங்கள் மிகவும் தரமுடையதாக இருக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளார்கள்.**

**அதனால்தான், விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகிய மூன்று பொருட்களுக்கும் இரண்டு வருடம் வாரண்டி காலத்தை அதாவது உத்தரவாதத்தை பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மேலும், பயனாளிகளுக்கு வழங்கப்படும் பொருட்கள்,**

**ஒரு மாத காலத்திற்குள் பழுது ஏற்பட்டால்,**
**அதற்கு பதிலாக புதிய பொருட்களை**
**72 மணி நேரத்திற்குள் மாற்றித் தர வேண்டும் என்றும்,**

**வினியோகம் செய்யப்பட்டு**
**ஒரு மாத காலத்திற்கு மேலாக பழுது ஏற்பட்டால்**
**72 மணி நேரத்திற்குள் பொருட்களை**
**இலவசமாக பழுது நீக்கம் செய்ய வேண்டும் என்றும்**
**விதிகள் வகுத்துத் தந்துள்ளார்கள்**
**என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இவ்வாண்டு அதாவது**
**2013–14 ஆம் ஆண்டில் மேலும் 35 லட்சம் விலையில்லா, மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகிய விலையில்லா வீட்டு உபயோக சாதனங்கள் வழங்கிட ஆணையிட்டதுடன், அதற்கென 1500 கோடி ருபாய் நிதியொதுக்கி ஆணையிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிரும் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த அவையில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

***(விலையில்லா மடிக்கணினிகள்)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்களது**
**அறிவாற்றலை அறிந்த**
**ஏனைய மாநிலங்களின் முதலமைச்சர்கள்,**
**மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்து**
**அடுத்து என்ன திட்டத்தை**
**செயல்படுத்தப் போகிறார்கள் என்று**
**உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.**

**காரணம்,**
**அந்தத் திட்டத்தை அப்படியே தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்தி தங்கள் மாநில மக்களின்**
**ஆதரவைப் பெற்று விட வேண்டும் என்று**
**எண்ணுகிறார்கள்.**

**அப்படிப்பட்ட ஒரு மகத்தான திட்டம்தான்**
**மாண்புமிகு அம்மா அவர்கள்**
**மாணவச் செல்வங்களுக்கு**
**விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்!**

**உத்தரப்பிரதேசத்தில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு**
**அந்த மாநில முதலமைச்சர்**
**மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கிய காட்சியை**
**நாளிதழ்களில் பார்க்கும் போது**
**தமிழர்களுக்கே அது தனிப்பெருமை அளிக்கும்**
**காட்சியாக அது இருந்தது.**

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்க்கு 2011–12 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 7 ஆயிரத்து 790 மடிக்கணினிகளும், 2012–13 ஆம் ஆண்டில் 7 லட்சத்து 56 ஆயிரம் மடிக்கணினிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி
மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும்
மடிக்கணினிகளின் தரம்
எவ்வித சமரசமும் இன்றி உறுதிப்படுத்தப்படுகிறது.

- மடிக்கணினிகளை வழங்குவதற்கு முன்னர், அவை, வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி உள்ளனவா, என்று, மூன்றாம் தரப்பு முகவரமைப்பு மூலம், சரிபார்க்கப்படுகிறது.
- மடிக்கணினிகள் வழங்கப்படும் இடங்களில், அவற்றுள் குறைந்த அளவு 5 சதவீத மடிக்கணினிகளின் தரத்தை, நிறுவனங்களின் தலைவர்கள் உறுதி செய்கிறார்கள்.
- மடிக்கணினிகளைப் பெறும் மாணவச் செல்வங்கள் மடிக்கணிணிகளை சிரமமின்றி இயக்கிடும் வகையில் செயல் விளக்கம் செய்து காட்டப்படுகிறது.
- மடிக்கணிணிகளை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தொழில்நுட்ப பணியாளர்கள் முன்னிலையில் நல்ல நிலையில் இயங்குவதை உறுதி செய்து மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.
- மடிக்கணினிகளில் பழுது ஏற்பட்டால் அதனை சீர்படுத்த வட்ட அளவில் பழுதுபார்ப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 2013–14–ஆம் ஆண்டில், 5 லட்சத்து 65 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கிடவும், அதற்கு 1500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்கள், என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(எழுதுபொருள் அச்சுத் துறை)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு காலத்தில் பேரும், பெருமையும் கொண்டு
விளங்கிய துறை ...
180 ஆண்டுகால பாரம்பரியம் மிக்க துறை ...
எழுதுபொருள் அச்சுத் துறை.

ஆனால்,
கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில்
அந்த பெருமையின் சுவடே இல்லாமலும்,
நவீன எந்திரங்கள் என்றால்
என்னவென்று தெரியாமலும் இயக்கப்பட்டு,
ஒரு சவலைப் பிள்ளை போலவே
இத்துறையை வைத்திருந்தார்கள்.

ஆனால்,
எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம்
மேற்கொள்ளப்படும் அச்சுப் பணிகள் தரமுள்ளதாகவும்,
தனியார் நிறுவனங்களுக்கே
முன்னுதாரணம் காட்டக்கூடியதாகவும்
அழகும் நேர்த்தியும் ஒருங்கே கொண்டதாகவும்
அமைந்திட வேண்டும் என்ற எண்ணத்துடன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஆட்சிப் பொறுப்பேற்கும் காலங்களில் எல்லாம்
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு
தனி முக்கியத்துவம் அளித்து, ஆக்கமும் ஊக்கமும் தந்து
புதுப்பொலிவுடன் திகழ வழிவகுத்து தருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற 1991–96–ஆம் ஆண்டு காலத்தில் இத்துறையினை நவீன எந்திரங்கள் நிறுவி நவீனமயமாக்க ஆணையிட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க ரூ.1 கோடியே 57 லட்சம் மதிப்பீட்டில் வண்ண ஆப்செட் எந்திரம் முதலான நவீன எந்திரங்கள் அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டன.

அதேபோல, 2001–2006–ஆம் ஆண்டுகளில்

– ரூ.43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மைய அச்சகத்தில் இரு வண்ண ஆப்செட் எந்திரமும்,

– ரூ.43 லட்சம் மதிப்பீட்டில் மதுரை உயர்நீதிமன்ற கிளை அச்சகத்தில் இரு வண்ண வெப் ஆப்செட் எந்திரமும்,

– ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் இருவண்ண வெப் ஆப்செட் எந்திரமும்,

கொள்முதல் செய்து நிறுவப்பட்டன. இதே காலகட்டத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்துறையினை பல்வேறு புதிய எந்திரங்கள் மூலம் நவீனப்படுத்த ரூ.2.66 கோடியினை வழங்கினார்கள்.

தற்போது, மூன்றாம் முறையாக கடந்த 2011–ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதும் இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப அரசு அச்சகங்கள் வளர்ச்சிபெற பல்வேறு புதிய திட்டங்களை செயலாக்கி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மைய அச்சகத்தினை அதிநவீனமயமாக்கிடவும், அச்சுப்பணிகளை நேர்த்தியாகவும், துல்லியமாகவும் அதே நேரத்தில் தாமதமின்றி விரைந்து மேற்கொள்ளவும் ரூ.1.10 கோடி மதிப்பில் கணினி மூலம் அச்சுத் தகடு தயாரிக்கும் உலகத்தரம் வாய்ந்த நவீன எந்திரம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணைப்படி அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த தனித்தாள் வண்ண ஆப்செட் அச்சு எந்திரம் அரசு மைய அச்சகத்திற்காக ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**இந்த எந்திரங்களின் மூலம் அச்சுப் பணிகளை அதிகமான எண்ணிக்கையில் அழகும், தரமும் கொண்டதாக மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்து தந்துள்ளார்கள்.**

**எழுதுபொருள் அச்சுத்துறையானது மாற்றுத்திறனாளிகள் நலன்களை காப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பத் துறையாக செயலாற்றி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இத்துறையில் இதுவரை 11% மாற்றுத் திறனாளிகள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.**

**கடந்த இரண்டாண்டுகளில் இத்துறை சார்பாக 84 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கி அவர்களது குடும்பங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு ஒளிவிளக்கேற்றி வைத்துள்ளது.**

**கடந்த ஆண்டில் இத்துறையின் மூலம் 60,076 நபர்கள் பெயர்மாற்ற அறிவிப்புகளை அரசிதழில் பதிவுசெய்து பயனடைந்துள்ளனர்.**

**தென் மாவட்ட மக்கள் பயன்பெற மாண்புமிகு. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மதுரையிலும், திருச்சியிலும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் கடந்த ஆண்டில் திறக்கப்பட்டன.**

**சமூகரீதியிலும், குடும்பரீதியிலும் புறக்கணிக்கப்பட்டு பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் இருக்கும் திருநங்கையர்களின் பெயர்மாற்றத்தை அரசிதழில் கட்டணமின்றி பதிவு செய்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் பயனை இன்று ஆயிரக்கணக்கான திருநங்கையர் அனுபவித்து வருகின்றனர்.**

**"நாளை உலகை ஆள வேண்டும்**
**உழைக்கும் கரங்களே – இந்த**
**நாடு முழுதும் மலர வேண்டும்**
**புரட்சி மலர்களே"**

**– தொழிலாளர்களைப் போற்றி புரட்சித்தலைவர்**
**எம்ஜிஆர் பாடிய பாடல் இது.**

**தொழிலாளர்களது நலனில் தனி ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், எழுதுபொருள் அச்சுத்துறை சார்பில் அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், தொழில் நுட்ப பணியாளர்களுக்கும் வழங்கப்படும் படிகளை கணிசமாக உயர்த்தி தந்திருப்பதுடன் பல்வேறு சிறப்பூதியங்கள் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.**

**தொழில்நுட்பப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர சிறப்பு ஊதியப்படி ரூ.150–லிருந்து ரூ.200 ஆக உயர்வு.**

**இரவு நேரங்களில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இரவு நேரப்படி ரூ.14/–ல் இருந்து ரு.25 ஆக உயர்வு.**

**புத்தகம் கட்டும் பிரிவில் வெட்டு இயந்திரங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர இடர்ப்படி ரூ.30–லிருந்து ரூ.200 ஆக உயர்வு**

**விடுமுறை நாட்களில் விடுப்பு ஏதுமின்றி தொடர்ந்து பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்கு வார ஈட்டுப்படி ரூ.15–லிருந்து ரூ.200– ஆக உயர்வு.**

**புத்தகம் கட்டுநர்களாக பணிபுரியும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.500 ஊக்கத்தொகை.**

**நாள் தவறாது இரவில் பணியாற்றும் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்ற அச்சகப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.300 சிறப்பு ஊதியம்,**

**என தொழிலாளர் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சீரிய வழிகாட்டுதலின்படி முற்றிலும் நவீனமயமாக்கப்பட்டு வரும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இன்னும் சிறப்போடும், முழுமையான அர்ப்பணிப்பு உணர்வோடும் பணியாற்றும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

***நிறைவுரை***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**இலக்கியங்கள் ஏற்றிவைத்த இயற்றமிழ்...**
**இதயங்களைத் தாலாட்டும் இசைத்தமிழ் ...**
**மக்களை மகிழ்விக்கும் நாடகத் தமிழ் ...**
**இந்த மூன்று தமிழுக்கும் ஒரே வடிவம்**
**அம்மா...**

**சமுதாயப் புரட்சிக்கு தந்தை பெரியார்**
**தமிழ்மொழியின் எழுச்சிக்கு பேரறிஞர் அண்ணா**
**மனிதநேய மாண்புக்கு புரட்சித்தலைவர் எம்ஜிஆர்**
**இந்த மூன்று தலைவர்களுக்கும் ஒரே வடிவம் அம்மா ...**

**நல்ல திட்டங்களைப் படைக்கின்ற சக்தி**
**நாட்டு மக்களைக் காக்கின்ற சக்தி**
**அநீதிகளை அழிக்கின்ற சக்தி ...**
**இந்த மூன்று சக்திகளுக்கும் ஒரே வடிவம்**
**அம்மா...**

**ஓராண்டிலே நூறாண்டு சாதனைகள் படைத்த அம்மா...**
**ஈராண்டிலே எண்ணற்ற சாதனைகள் செய்திருக்கிறார் ...**

**வானத்தில் இருக்கின்ற நட்சத்திரங்களையும்**
**கணக்கிட முடியாது**
**மாண்புமிகு அம்மா அவர்களின்**
**உள்ளத்தில் உதிக்கின்ற நலத்திட்டங்களையும்**
**கணக்கிட முடியாது**
**என்று மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

**மாண்புமிகு அம்மா அவர்களை முதல்வராக அடைய**
**நாங்கள் என்ன தவம் செய்தோம்**
**என்று நாடே மகிழ்ந்து கொண்டிருக்கிறது.**

ஏழுகோடி தமிழ் மக்களின்
துன்பங்களை, துயரங்களை,
தீர்த்து வைக்கின்ற பொறுப்பினை

கோரிக்கைகளை, வேண்டுதல்களை,
நிறைவேற்றித் தருகின்ற பொறுப்பினை

விண்ணிலே இருக்கின்ற தெய்வம்
மண்ணிலே இருக்கின்ற மனித தெய்வம்
நம் இதயதெய்வம் அம்மா அவர்களிடம்
ஒப்படைத்திருக்கிறது.

எங்களின் கருணை தெய்வமே,
தமிழ் மண்ணின் காவல் தெய்வமே ...
உங்களால் தான் இன்று தமிழ்நாடு வளம் பெற்றது.
நாளைய பாரதமும்
உங்களால் தான்
வளம் பெறப் போகிறது
பலம் பெறப் போகிறது
வல்லரசாக மாறப் போகிறது

இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியை உரித்தாக்கி வெற்றித் தலைவியாகிய மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

(1) செய்தி மற்றும் விளம்பரத் துறை
(அறிவிப்புகள்)
(2) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை
(அறிவிப்புகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு உறுப்பினர்கள் செய்தி மற்றும் விளம்பரத் துறை குறித்து 31 மாமன்ற உறுப்பினர்களும், எழுதுபொருள் அச்சுத் துறை குறித்து 20 மாமன்ற உறுப்பினர்களும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை குறித்து 20 மாமன்ற உறுப்பினர்களும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றிக்குப் போதுமான விளக்கங்களை என் பதிலுரையில் தெரிவித்திருப்பதாகக் கருதுகிறேன். இருப்பினும், விடுபட்டுப் போன வெட்டுத் தீர்மானங்கள் மீதும் துறையினருடன் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கூடுமானவரையில் அவற்றை நிறைவேற்றுவேன் என்று கூறி, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

-----